சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்: 11.06.2025

PW1: நாகராஜன் த/பெ– பாண்டி

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

நான் 2 ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையை படித்து பார்த்துள்ளேன். 2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரைக்கு மறுப்பு தெரிவித்து பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை. சஞ்சீவ் நாயுடு எனது தாத்தா. அவர் விருதுநகர் ரயில்வேயில் வேலை பார்த்து ஓய்வு பெற்றுவிட்டார். அவர் விருதுநகரில் வேலை பார்த்த போது தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல, தாவா சொத்துக்களை மட்டும் கிரையம் வாங்கினார். எனது தாயார் பேபியம்மாள் உயிருடன் இருந்த போது தபசில் சொத்தில் 1/3 பாகம் உரிமை கோரி இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.243/2010 என்ற வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனது தாயார் பேபியம்மாள் உயிருடன் இருந்த போது அ.வ.எண்.243/2010 என்ற வழக்கு தாக்கல் செய்து வழக்கில் விசாரணை நடைபெற்று 11.07.2013ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. எனது தாயாருடன் பிறந்த சகோதரர் பாண்டிக்கு வாரிசுகள் யார் என்றால் எனது மனைவி லைலா, மகன் பெருமாள் ஆகியோர்கள். பெருமாளின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியாது. பெருமாள் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்றால் சரிதான். பெருமாள் உயிருடன் தான் இருக்கிறார் என்றும், அதனால் தான் அவரது இறப்பு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது தாயார் தாக்கல் செய்துள்ள

அ.வ.,எண்.243/2010 வழக்கில் எனது தாயார் இறந்த பின்னர் நான் அவ்வழக்கில் எனது தாயாரின் நான் தான் சட்ட படியான வாரிசு என்றும், பெருமாளுக்கு சட்டப்படியான காப்பளார் என்றும் மனு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை. ஏற்கனவே எனது தாயார் 1/3 பாகம் கோரி வழக்கு தாக்கல் செய்து அதை நான் மேல்நடத்திவிட்டு அதை மறைத்து நான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் அதனால் முன் தீர்ப்பு தடையினால் வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல.

(5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)